மு.சரவணன், முதுகலை ஆசிரியர், (பொருளியல்)
T.A.C அரசு மேல்நிலைப் பள்ளி, கோட்டையூர்

# முக்கிய வினாக்கள்

வகுப்பு : 12 பாடம் : பொருளியல்

## இரண்டு மதிப்பெண் வினா – விடைகள்

### பாடம் - 1

1. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.

   பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு பொரளாதாரத்தின் ஒட்டு மொத்த தேசிய வருவாய், வேலை வாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தியை உள்ளடக்கியது.

2. பண வீக்கம் என்ற பதத்தின் பொருள் யாது?

   பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பது.

3. முதலாளித்துவம் என்றால் என்ன?

   பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் தனியாரின் பங்கு அதிகமாகவும் அரசின் பங்கு குறைவாகவும் இருக்கும் அமைப்பு.

4. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரத்தை வகைப்படுத்துக.

   i. வளர்ந்த பொருளாதாரம்
   ii. வளராத பொருளாதாரம்
   iii. வளரும் பொருளாதாரம்
   iv. முன்னேறாத பொருளாதாரம்

5. “வருமானத்தின் வட்ட ஓட்டம்” – வரையறு.

   ஒரு பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பை விளக்குவது வருமானத்தின் வட்ட ஓட்டம் ஆகும்.

### பாடம் - 2

6. தேசிய வருவாய் இலக்கணம் தருக.

   ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு.

7. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.

   GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

8. தனிநபர் வருமானம் என்றால் என்ன?

ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் ஒவ்வொரு தனி நபருக்கும் பல்வேறு வழிகளில் கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும்.

9. GDP குறைப்பான் இலக்கணம் தருக.

GDPயில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்.

(or)

GDP குறைப்பான் = பணமதிப்பு GDP / உண்மை மதிப்பு GDP X100

10. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தை தருகிறது?

விவசாயிகள் தங்களின் சொந்தத் தேவைக்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். இந்தப் பகுதி தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் உள்ளது.

## பாடம் – 3

11. முழு வேலைவாய்ப்பு வரையறு?

கீன்சின் கூற்றுப்படி முழு வேலை நிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாத நிலையை குறிக்கும்.

12. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்புகள் யாவை?

i. பருவ கால வேலையின்மை
ii. மறைமுக வேலையின்மை

13. ‘சே’ விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.

i. முழு வேலை நிலை நிலவும்
ii. நிறைவுப் போட்டி சந்தை
iii. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத்தன்மை

14. விளைவுத் தேவை என்றால் என்ன?

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கின்ற பண அளவு ED = Y = C + I

15. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

i) மொத்த நுகர்வுச் செலவு (C), ii) மொத்த தனியார் சேமிப்பு (S)
iii) நிகர வரி வசூல் (T), iv) உதவித் தொகை (Rf)



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# பாடம் – 4

16. நுகர்வுச் சார்பு என்றால் என்ன?

வருவாய்க்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு $C = f(y)$

17. சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு.

வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள விகிதம் $APC = {}^{C}/_{Y}$

18. இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) வரையறு.

வருமான மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஆகும். $MPC = \frac{\Delta C}{\Delta Y}$

19. சேமிப்பு நாட்டம் என்றால் என்ன?

வருமானத்திற்கும் சேமிப்பிற்கும் உள்ள தொடர்பு $= {}^{S}/_{Y}$

20. இறுதி நிலை சேமிப்பு நாட்டம் வரையறு.

வருமான மாற்றத்திற்கும், சேமிப்பு மாற்றத்திற்கும் இடையே உள்ள வீதம் இறுதி நிலை சேமிப்பு நாட்டம் ஆகும். $MPS = \frac{\Delta S}{\Delta Y}$

21. பெருக்கி வரையறு.

வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் பெருக்கி ஆகும். $K = \frac{\Delta Y}{\Delta I}$

22. முடுக்கி – வரையறு

தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் நுகர்வில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் முடுக்கி எனப்படும் – குரிஹாரா

23. பணத்தின் இலக்கணம் தருக.

“பணம் எதைச் செய்கிறதோ அதுவே பணம்” – வாக்கர்.

24. நெகிழிப் பணம் என்றால் என்ன?

- நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்ட பணம் நெகிழிப் பணம் எனப்படும்.
- காகிதப் பணத்திற்கு மாற்றாகும்

எ.கா : கடன் அட்டை, ரொக்க அட்டை

25. பண வீக்கம் என்றால் என்ன?

“குறைந்த அளவுப் பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை”

\- கோல்பர்ன்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

26. தேக்க வீக்கம் என்றால் என்ன?

பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலை, வேலையின்மை மற்றும் மிகைப் பணவீக்கம் சேர்ந்த சூழ்நிலை.

## பாடம் – 6

27. வணிக வங்கிகள் என்பதை வரையறு

மக்களிடம் உள்ள வைப்புகளைப் பெற்று நிறுவனங்களுக்கு கடனளித்து இலாப நோக்கத்தில் செயல்படும் நிதி அமைப்பு.

28. கடன் உருவாக்கம் என்றால் என்ன?

மொத்தப் பண அளிப்பில் கடன் பணத்தின் அளவை அதிகரிப்பது கடன் உருவாக்கம் எனப்படும்.

29. மைய வங்கி என்பதனை வரையறு.

மைய வங்கியானது வங்கிகளின் வங்கி, நாட்டின் பண அளிப்பை கட்டுப்படுத்துவதும், மற்றும் வட்டி விகிதம் போன்றவற்றை நிர்வகித்து, வணிக வங்கிகளை மேற்பார்வை செய்யும் அமைப்பாகும்.

30. CRR மற்றும் SLR வேறுபடுத்துக.

| CRR | SLR |
|---|---|
| வணிக வங்கிகள் மைய வங்கியில் வைத்திருக்க வேண்டிய வைப்புகளின் குறிப்பிட்ட விகிதம் | வணிக வங்கிகள் தன்னிடம் வைத்திருக்க வேண்டிய நீர்மை சொத்து விகிதம் |

## பாடம் – 7

31. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?

பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றியது.

32. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.

பொருட்கள் மற்றும் பணிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே பரிமாறிக் கொள்வது.

33. பன்னாட்டு வாணிபத்தின் நன்மைகள் இரண்டு கூறுக.

1) நாடுகளுக்கிடையே சமமான விலை

2) பற்றாக்குறை வளங்களை சமமாகப் பகிர்தல்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

34. வாணிப வீதத்தினை விளக்குக.

ஏற்றுமதிப் பொருளின் விலைக்கும் இறக்குமதிப் பொருளின் விலைக்கும் இடையிலான விகிதம் வாணிப வீதம் ஆகும்.

35. வாணிப செலுத்து நிலை பற்றி நீவீர் அறிவது யாது?

ஒரு நாடு ஒரு குறிபிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரப் பரிவர்தனை அறிக்கை.

36. செலவாணி மாற்று வீதம் என்றால் என்ன?

ஒரு அலகு வெளிநாட்டுப் பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம் என்பதாகும்.

உதாரணம் : ஒரு அமெரிக்க டாலர் = 75.00 இந்திய ரூபாய்

## பாடம் – 8

36. சிறப்பு எடுப்புரிமை என்பதன் பொருள் கூறுக.

1) தாள் தங்கம் என்று அழைக்கப்படும்.

2) பன்னாட்டு பண நிதியத்தின் கட்டளை பணம்

37. ஆசியானின் இரண்டு நோக்கங்களை கூறுக.

1) உறுப்பு நாடுகளில் பொருளாதார, சமூக வளர்ச்சி

2) கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வசதிகள் ஏற்படுத்துவது.

38. IBRD (உலக வங்கி)யின் ஏதேனும்இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை கூறுக.

1) இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது.

2) கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது.

39. பொதுச் சந்தை வரையறு.

புவியின் குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகளின் பரிமாற்றத்திற்காக ஏற்படுத்தப்படும் அமைப்பு. எ.கா. ECM

40. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.

1) பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு

2) பன்னாட்டு நிதிக் கழகம்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## பாடம் – 9

41. 'பொது நிதி' வரையறு

அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பிளையும், கொள்கைககளையும் ஆராய்வது.

42. பொது வருவாய் என்றால் என்ன?

அரசின் வரி மற்றும் வரியில்லா வருமானங்கள் பற்றியது.

43. 'வரி', 'கட்டணம்' வேறுபடுத்துக.

| வரி | கட்டணம் |
|---|---|
| அரசுக்கு கட்டாயம் செலுத்த வேண்டும் | கட்டாயம் இல்லை |
| அரசிடம் எவ்வித நன்மையும் எதிர்பாராமல் செலுத்துவது | அரசு சில சேவை செய்ய வசூலிப்பது. |

44. பூஜ்ய அடிப்படை வரவு – செலவுத்திட்டம் குறிப்பு வரைக.

ஒவ்வொரு செலவும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும். புதிய மதிப்பீடுகள் செய்யப்படும்.

45. நேர்முக வரிக்கு இரண்டு உதாரணம் தருக.

1) வருமான வரி, 2) சொத்து வரி

46. பொதுக்கடன் என்பதன் பொருள் யாது?

அரசானது பொதுமக்கள் மற்றும் தனி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகும்.

## பாடம் – 10

47. சூழலியல் என்றால் என்ன?

உயிரினங்களுக்கு இடையேயான உறவும், அவைகளின் சுற்றுச்சூழலையும் படிப்பது சூழலியல் ஆகும்.

48. தலா கரமிலவாயு அதகமாக வெளியேற்றும் நாடுகள் யாவை?

1) அமெரிக்கா, 2) ஜெர்மனி, 3) இங்கிலாந்து, 4) பிரான்ஸ் போன்ற வளர்ந்த நாடுகள்

49. ஒலி மாசுவினை கட்டுப்படுத்தும் வழிகள் யாவை?

1)ஒலித்தடைகளை ஏற்படுத்துதல், 2) ஒலி பெருக்கிகளை கட்டுப்படுத்துதல் 3) போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

50. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.

புவி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்பநிலையே உலக வெப்பமயமாதல் எனப்படும்.

51. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.

ஒரு விதை உரம் கலந்த களிமண்ணில் மூடி வைக்கப்பட்டு உளர்த்தப்படுகிறது. இதனை எங்கு வேண்டுமோ விதைக்கலாம்.

## பாடம் – 11

52. பொருளாதார முன்னேற்றம் வரையறு

நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் ஏற்படும் நல்ல மாற்றங்கள் ஆகும்.

53. பொருளாதார திட்டமிடுதலின் இலக்கணம் கூறுக.

தனியார் உற்பத்தி மற்றும் பரிமாற்ற நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது பொருளாதாரத் திட்டமிடல் ஆகும்.

54. நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.

1) இது இந்தியாவை உருமாற்றம் செய்ய ஏற்படுத்தப்பட்ட தேசிய நிறுவனம்

2) திட்டக் குழுவிற்குப் பதிலாக 2015-ல் அமைக்கப்பட்டது.

3) இதன் தலைவர் பிரதமர்

## பாடம் – 12

55. ஒட்டுறவு என்பதை வரையறு

ஒட்டுறவு என்பது இரண்டு மாறிகளுக்கிடையே உள்ள உறவு.

56. புள்ளியியல் என்றால் என்ன?

புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகழ்தகவுகளைப் பற்றிய அறிவியல் – போடிங்டன்

57. பொருளாதார அளவையில் என்றால் என்ன?

பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகியவற்றின் இணைப்பாகும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மு.சரவணன், முதுகலை ஆசிரியர், (பொருளியல்)
T.A.C அரசு மேல்நிலைப் பள்ளி, கோட்டையூர்

# முக்கிய வினாக்கள்

வகுப்பு : 12 பாடம் : பொருளியல்

## மூன்று மதிப்பெண் வினா – விடைகள்

## பாடம் - 1

1. பேரியல் பொருளியலின் முக்கியத்துவத்தை கூறுக.
   i. பொருளாதார செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும்
   ii. எதிர்காலப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும்
   iii. கொள்ளைகளை உருவாக்க, எதிர்கலத்தை முன்பே அறியவும்.
2. பொருளாதார அமைப்பின் வகைகள் யாவை?
   i. முதலாளித்துவம் : இங்கு தனியாரின் பங்கு அதிகமாகவும் அரசின் பங்கு குறைவாகவும் இருக்கும்.
   ii. சமத்துவம் : உற்பத்தியின் அனைத்து செயல்பாடுகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
   iii. கலப்புத்துவம் : முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் இரண்டின் இயல்புகளையும் கொண்டது.
3. முதலாளித்துவத்தின் சிறப்புகளை கூறுக.
   i. தனியார் சொத்துரிமை
   ii. இலாப நோக்கம்
   iii. போட்டியில் சுதந்திரம்
   iv. விலை இயங்கும் முறை
   v. அரசின் பங்கு குறைவு
4. சமத்துவத்தின் குறைகளை கூறுக.
   i. சிவப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம்
   ii. ஊக்கமின்மை
   iii. தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு
   iv. அதிகாரம் குவிதல்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

5. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளைக் கூறுக.
   i. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருத்தல்
   ii. பொருளாதார திட்டமிடல்
   iii. பொருளாதாரப் பிரச்சனைக்கு தீர்வு
   iv. சுதந்திரமும் கட்டுப்பாடும்.
6. இருதுறை சூழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.
   i. இல்லத்துறை : இத்துறை அனைத்து வருமானத்தையும், நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கப் பயன்படுத்துகிறது.
   ii. நிறுவனத்துறை : இத்துறையானது பொருட்கள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பதன் மூலம் வருமானம் ஈட்டுகிறது.

## பாடம் - 2

7. தலைவீத வருமானம் பற்றி குறிப்பு வரைக.
   i. ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு தனி நபரின் வருமானம்
   ii. தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது.
   iii. தலைவீத வருமானம் என்றும் அழைக்கலாம்
8. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வரமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

| தனி நபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல்வேறு வழிகளில் கிடைக்கும் வருமானம். | தனி நபர் வருமானம் – நேர்முக வரி = செலவிடக்கூடிய வருமானம் |

9. செலவு முறை பற்றி – ஒரு குறிப்பு வரைக.

   செலவு முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருமானம் கணக்கிடப்படுகிறது. $GNP = C + I + G + (X – M)$

10. தேசிய வருவாய் கணக்கிடுதலில் ‘இருமுறை கணக்கீடு’ பிரச்சனைக்கு தீர்வு என்ன?

   இறுதிப் பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட கூடுதல் மதிப்பையோ கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

11. தேசிய வருவாயின் பயன்களை பட்டியலிடுக.

i. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விளக்குகிறது

ii. பொருளாதார திட்டமிடுதலுக்கு தேசிய வருமான புள்ளி விவரங்கள் அவசியம்

iii. மக்களின் வாழ்க்கைத் தரத்தை அறிய

iv. பிறநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட

v. ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றை அறிந்துகொள்ள.

## பாடம் - 3

12. 'சே' விதியின் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.

i. அதிக உற்பத்திக்கும், வேலையின்மைக்கும் வாய்ப்பு இல்லை.

ii. விலைக் கருவி தானாக இயங்குவதால் அரசின் தலையீடு தேவையில்லை.

iii. வட்டி விகித நெகிழ்வுத் தன்மை சேமிப்புக்கும், முதலீட்டிற்கும் சம நிலையை உண்டாக்கும்.

13. தொகுதேவை என்றால் என்ன? அதன் கூறுகள் யாவை?

உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர் நினைக்கிறார்களோ அதுவே தொகுதேவை எனப்படும்.

கூறுகள் :

i. நுகர்வுத் தேவை

ii. முதலீட்டுத்தேவை

iii. அரசுச் செலவு

iv. நிகர ஏற்றுமதி

$$AD = C + I + G + (X-M)$$

14. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.

| தன்னிச்சையான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|
| i. தன்னிச்சையானது. | i. திட்டமிடப்பட்டது. |
| ii. சமூக நோக்கமுடையது. | ii. இலாப நோக்கமுடையது. |
| iii. வருவாய் நெகிழ்ச்சியற்றது. | iii. வருவாய் நெகிர்ச்சி உள்ளது. |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

15. முடுக்கி – பெருக்கி வேறுபடுத்துக

| முடுக்கி | பெருக்கி |
|---|---|
| i. முதலீடு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதம்<br>ii. $\beta = \frac{\Delta I}{\Delta C}$ | i. வருமான மாற்றத்திற்கும் முதலீட்டு மாற்றத்திற்கும் உள்ள விகிதம்<br>ii. $K = \frac{\Delta Y}{\Delta I}$ |

## பாடம் - 5

16. பண அளிப்பு என்றால் என்ன?

   i. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் உள்ள பணப் புழக்க அளவே பண அளிப்பு

   ii. வட்டி விகிதம், விலைவாசி பண அளிப்பை தீர்மானிக்கும் முக்கிய காரணிகள்

   iii. மைய வங்கி பண அளிப்பை M1, M2, M3 மற்றும் M4 என அளவிடுகிறது.

17. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

   i. ரொக்க வைப்பு விகிதம் (CDR)

   ii. ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (RDR)

   iii. ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (CRR)

   iv. சட்டப்பூர்வ நீர்மை விகிதம் (SLR)

18. தேவை இழுப்பு மற்றும் செலவு உந்துப் பணவீக்கத்தினை விளக்குக.

   i. தேவை இழுப்பு பண வீக்கம் : பொருட்களின் அளிப்பு நிலையாக இருக்கும்போது தேவை அதிகரிப்பது.

   ii. செலவு உந்துப் பண வீக்கம் : மூலப்பொருட்களின் செலவு அதிகரிப்பால் பொருட்களின் விலை உயர்வது.

## பாடம் - 6

19. நபார்டின் பணிகள் யாவை?

   i. விவசாயம், சிறுதொழில், குடிசைத் தொழில்களுக்கு மறுகடன் வழங்குதல்.

   ii. மாநில அரசுக்கு 20 ஆண்டு கால கடன் வழங்குதல்

   iii. மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நீண்ட கால கடன் வழங்குதல்

   iv. வேளாண்மை, ஊரக வளர்ச்சி பற்றிய ஆய்வுகளை மேம்படுத்துவது.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

20. இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் பணிகள் யாவை?

i. இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டுப் பணத்தில் நீண்ட காலக்கடன் வழங்குதல்

ii. இறக்குமதி, ஏற்றுமதிக்கு உத்திரவாதம் அளித்தல்

iii. வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடனுக்கு உத்திரவாதம் வழங்குதல்

21. பணச் சந்தையையும் மூலதனச் சந்தையையும் வேறுபடுத்துக.

| பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|
| i. அதிக நீர்மைத்தன்மை கொண்ட நிதிக்கருவிகளை கையாளுகிறது | i. குறைந்த நீர்மைத்தன்மை கொண்ட கருவிகள் கையாளுகிறது. |
| ii. குறுகிய கால முதிர்ச்சி கொண்ட கடன் கருவி | ii. நீண்ட கால் முதிர்ச்சி கொண்ட கடன் கருவி |
| iii. எ.கா:அரசுப் பத்திரம், மாற்றுச்சீட்டு | iii. எ.கா: அந்நிய செலவாணி |

22. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள் யாவை?

i. கருப்புப் பணத்தினை ஒழிப்பது, இலஞ்சத்தை தடுப்பது.

ii. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது

iii. கள்ளப் பணத்தினை ஒழிப்பது.

## பாடம் - 7

23. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்டும் புதிய கோட்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

| தொன்மைக் கோட்பாடு | புதிய கோட்பாடு |
|---|---|
| i. உழைப்பு சார்ந்த மதிப்பு கோட்பாடு அடிப்படை | i. பொதுமதிப்புக் கோட்பாடு அடிப்படை |
| ii. ஒரு காரணி (உழைப்பு) | ii. இரு காரணிகள் (உழைப்பு, மூலதனம்) |
| iii. உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடு | iii. உற்பத்திக் காரணிகள் கிடைப்பதில் வேறுபாடு |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

24. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும், அயல்நாட்டுச் செலுத்தல் நிலைக்கும் ஏதேனும் மூன்று வேறுபாடுகளைக் கூறுக.

| வாணிபக் கொடுப்பல் நிலை | அயல்நாட்டுச் செலுத்தல் நிலை |
|---|---|
| i. பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் | i. பண்டங்கள், பணிகள், முலதனம், பணம் பற்றிய விவரங்கள் |
| ii. புலப்படும் வாணிகம் | ii. புலப்படாத வாணிகம் |
| iii. ஏற்றுமதி அதிகமாக இருந்தால் சாதகம் இறக்குமதி அதிகமாக இருந்தால் பாதக வாணிகம் | ii. வரவு மற்றும் கடன் இனங்கள் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பதியப்படும் |

25. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக

i. விற்பனையை விரிவுபடுத்துதல்
ii. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
iii. வாணிக பரவலாக்கம்
iv. போட்டி, இடர்பாடுகளை குறைத்தல்

## பாடம் - 8

26. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.

i. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
ii. பொதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்
iii. உறுப்பு நாடுகளின் ஏழ்மையை ஒழிப்பது
iv. பயங்கரவாத செயல்களை தடுத்தல்

## பாடம் - 9

27. வரிவிதிப்பு விதிகளை விவரி

i. சிக்கன விதி
ii. சமத்துவ விதி
iii. வசதி விதி
iv. உறுதி விதி
v. செலுத்தும் திறன் பற்றி விதி

28. நவீன அரசின் பணிகள் யாவை?

i) பாதுகாப்பு பணி, ii) நீதிப் பணி iii) சமூக நலப்பணி,
iv) கட்டமைப்புப்பணி, v) பேரியல் பொருளாதாரக் கொள்கை பணி



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.

i. அரசுக்கு கட்டாயம் செலுத்தப்பட வேண்டிய ஒன்று
ii. அரசிடம் எந்தவித நம்மையும் எதிர்பாராமல் செலுத்த வேண்டியது.
iii. ஒவ்வொரு வரியும், வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.

30. நேர்முகவரி, மறைமுக வரி வேறுபடுத்துக.

| | |
|---|---|
| i. வருமானத்தின் மீது விதிக்கப்படும் | i. பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும். |
| ii. வரி ஏய்ப்புக்கு வாய்பு உள்ளது | ii. வரி ஏய்ப்பது கடினம் |
| iii. வரிச் சுமையை மற்றவர் மீது மாற்ற முடியாது | iii. வரி சுமையை மற்றவர் மீது மாற்ற முடியும் |
| எ.கா : வருமானவரி | எ.கா : விற்பனை வரி |

## பாடம் - 10

31. நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?

i. கழிவு நீர் வெளியேற்றம்
ii. எண்ணெய் சிந்துதல்
iii. அமில மழை
iv. புவி வெப்பமடைதல்

32. இ-கழிவு என்பதன் பொருள் கூறுக.

மின் சாதனங்களை பயன்படுத்திவிட்டு இவை பயன்படாது என்று கழிக்கும் போதோ அல்லது மறு சுழற்சி செய்யும் போதோ தோன்றுபவை இ-கழிவு எனப்படும். எ.கா : டி.வி, வி.சி.ஆர், கம்ப்யூட்டர், செல்போன், மின்விசிறி

33. நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக

நில மாசு : சுற்றுச்சூலில் கொட்டப்படும் திட, திரவ, வாயுப் பொருட்கள் நிலத்தின் தன்மையைக் கெடுப்பது

காரணங்கள் : 1) காடுகளை அழித்தல்
2) கழிவு மற்றும் குப்பைகளை கொட்டுதல்
3) அணுமின் கழிவுகள்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

34. குறிப்பு வரைக

அ) பருவநிலை மாற்றம்

வெப்பநிலை, மழைப் பொழிவு, காற்று ஆகியவற்றின் அளவுகளில் ஏற்படும் மாற்றம் பருவநிலை மாற்றம் எனப்படும்.

ஆ) அமில மழை

சல்பர்-டை-ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு வளிமண்டலத்தில் நீருடன் வினை புரிந்து மழை மற்றும் பனிப்பொழிவாக பூமிக்கு திரும்புவதை அமில மழை என்கிறோம்.

## பாடம் - 11

35. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?

i. மனித வளம்
ii. தொழில் நுட்ப அறிவு
iii. அரசியல் சுதந்திரம்
iv. சமூக அமைப்பு
v. ஊழல் இல்லாத நிர்வாகம்
vi. பரம்பரை சொத்துரிமை

36. நிதி ஆயோக்கின் பணிகளைக் கூறுக.

i. நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்
ii. பரவலாக்கத் திட்டமிடல்
iii. உகந்ததாக்குதல்
iv. சச்சரவுகளைத் தீர்த்தல்
v. திறன் உருவாக்குதல்

www.Padasalai.Net



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com